DEPOSITION OF WITNESS

அரக்கோணம் குற்றவியல் நடுவர் எண்.1 நீதிமன்றம் 2025 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் புதன்கிழமை 05ம் நாள் சாட்சியாகிய மதி என்பவரின் வாக்குமூலம் 1983 ஆம் ஆண்டு 10வது சட்ட விதியின்படி திருமதி. K.மம்தா Gr-III பெஞ்ச் கிளார்க், என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மதி | வயது | 56 |
| த/பெ. | குப்புசாமி | இனம் | ஆண் |
| கிராமம் | செய்யூர் | தொழில் | கூலி வேலை |
| சமயம் | | தாலூக்கா | |

C.C.97/2022

(எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜர்.)

<u>முதல் விசாரணை 05.02.2025 அ.சா.2</u>

1. நான் செய்யூரில் வசித்து வருகிறேன். அ.சா.1 தரணி எனது மனைவி. 4 வருடங்களுக்கு முன்பு மாலை 04.00 மணிக்கு கருணாகரன், சுந்தர், மதன், சுமன், தீலிப் ஆகியோர்கள் எனது மனைவியிடம் அடிப்பதாக தகவல் தெரிந்து நான் எனது வீட்டிற்கு சென்று பார்த்தபோது, எனது மனைவியை மேற்படி நபர்கள் அடித்துக்கொண்டிருந்தார்கள்.

2. நான் தடுக்க சென்றபோது மதன், சுமன் கீழே தள்ளி அடித்தார்கள்.எனக்கு மயக்கம் ஆகிவிட்டது. ஆட்டோவில் அரக்கோணம் அரசு மருத்துவமனைக்கு நானும், எனது மனைவியும் சிகிச்சைக்கு சென்றோம். எனது மனைவி 10 நாட்கள் சிகிச்சை எடுத்துக்கொண்டார். நான் 2 நாட்கள் மருத்துவமனையில் இருந்தேன்.

3. என்னை தாக்கிய நபர்களில் தீலிப், கருணாகரன், சுந்தர் ஆகியோர்கள் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார்கள். போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

4. எதிரிகள் வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.

மறு விசாரணை : இல்லை.

Taken down by me/before me
in Open Court,
Interpreted/read over
to the witness and admitted by
the deponent to be correct.
Sd/-K.Ramkumar.,M.L.,
Judicial Magistrate No.I,
Arakkonam.